# <u>பண்ணுருட்டி நகராட்சி</u>

## <u>*மன்ற கூட்ட அழைப்பிதழ்*</u>

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் பிலவ வருடம்** தமிழ் மாதம் **ஆவணி 14**, நாள் **30.08.2022** செவ்வாய்க்கிழமை நேரம் பிற்பகல் **2.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

## பண்ணுருட்டி நகராட்சி

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 30–08–2022–ந் தேதி செவ்வாய்க்கிழமை **பிற்பகல்** 2.00 மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1.

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

**மன்றப்பொருள்**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 இந்திரா காந்தி சாலையில் இயங்கி வந்த நூலகத்தினை மீண்டும் அதே இடத்தில் அமைத்து தரக்கோரி அப்பகுதி மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வரப்படுகின்றது. எனவே, மாணவ மாணவியர்களின் நலன் மற்றும் பொது மக்களின் விருப்பத்திற்கேற்ப ஏற்கனவே இயங்கி வந்த அதே இடத்தில் நகராட்சி மூலம் நூலகம் அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இருளங்குப்பம், திருவதிகை T.S.No.3/1, 3/6 என்ற முகவரியில் உள்ள சொத்தினை தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்து திருமதி.வசந்தா, திருமதி.சுசிலா மற்றும் திருமதி.ஜெயந்தி ஆகியவர்களால் கடலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையாளரை 6–வது பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கு எண். O.S.No.228/2022 சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.பரணிசந்தர் M.Com., BL., அவர்கள் ஆஜாராகி வழக்கினை நடத்திடவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.2026/2022/எப்1)**

3. இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறை மற்றும் வளாகத்தை சுத்தமாக பராமரிக்க பணியாளர்களை நியமிக்க ரூ. 7.45 இலட்சம் மதிப்பீட்டிலான நகராட்சி நடுநிலைப்பள்ளி பணி எண் – III க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | பொன்வசந்தம் மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 588/– |
| 2 | ஸ்ரீ ராகவேந்திரா மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 589/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பொன்வசந்தம் சுயஉதவிக்குழு, பண்ணுருட்டி நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.
2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

**(கோப்பு எண் : 1684 /2022/எச்2)**

4. இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறை மற்றும் வளாகத்தை சுத்தமாக பராமரிக்க பணியாளர்களை நியமிக்க ரூ. 8.69 இலட்சம் மதிப்பீட்டிலான பணி எண் – II க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ராகவேந்திரா மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 588 /– |
| 2 | பொன்வசந்தம் மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 589/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ ராகவேந்திரா மகளிர் சுயஉதவிக்குழு, பண்ணுருட்டி நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.
2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

(கோப்பு எண் : 1684 /2022/எச்2)

5.

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் கழிப்பறை மற்றும் வளாகத்தை சுத்தமாக பராமரிக்க பணியாளர்களை நியமிக்க ரூ. 7.45 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு பள்ளிகளுக்கான பணி எண் – III க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | பொன்வசந்தம் மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 588 /– |
| 2 | ஸ்ரீ ராகவேந்திரா மகளிர் சுய உதவிக்குழு | ரூ. 589 /– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பொன்வசந்தம் சுயஉதவிக்குழு, பண்ணுருட்டி நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.
2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.

(கோப்பு எண் : 1684/2022/எச்2)

6. தற்போது மழைக்காலமாக இருப்பதால் நோய் பரப்பிகளால் ஏற்படும் டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா, யானைக்கால், உள்ளிட்ட நோய்களைத் தடுக்கும் நடவடிக்கையாக கொசுப்புழுக்களை கண்டறிந்து அழிக்கும் பணியாளர்கள் (Domestic Breeding Checkers) 20 நபர்களை தற்காலிகமாக சுயஉதவிக் குழுக்கள் மூலம் மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியர் தினக்கூலி அடிப்படையில் நியமித்துக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) மாவட்ட ஆட்சியர் ஆய்வுக்கூட்டங்களிலும் துணை இயக்குநர் நலப்பணிகள், கடலூர் அவர்களின் கடிதம் வாயிலாகவும் DBC பணியாளர்களை நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்கண்ட பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண் : 2081/2022/எச்2)**

7. தற்போது மழைக்காலமாக இருப்பதால் கொசு ஒழிப்பு நடடிவடிக்கைக்காக புகைமருந்து தெளிப்பான்கள் சிறியது – 3 மற்றும் பெரியது – 1 ஆகியவற்றை பழுதுநீக்கம் செய்துகொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண் : 2285 /2022/எச்2)**

8. இந்நகராட்சியில் கடந்த மார்ச்–2022 முதல் ஜீலை–2022 வரை நடைபெற்ற நகரமன்ற கூட்டம் மற்றும் 31.03.2023 வரை நடைபெற உள்ள நகரமன்ற கூட்டத்திற்கு நகரமன்ற உறுப்பினர்களுக்கு சார்வு செய்திட கூட்ட அழைப்பிதழ் நகல் எடுத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.2127/2022/எப்1)**

9. பண்ணுருட்டி நகராட்சியில் கணினி பிரிண்டரில் பிரிண்ட் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் டோனர் 'மை' HP Laser Printer (M1005) உள்ள 12A டோனர் 'மை' 30 எண்ணிக்கையில் Refill செய்து வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை பொது நதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

10. இந்நகராட்சியில் பணிபுரியும் உள்புற மற்றும் வெளிப்புற பணியாளர்கள் / அலுவலர்கள் அனைவரும் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களால் நடத்தப்பெறும் பயிற்சியில் கலந்துகொள்வதற்கு சென்று வருவதற்கு 2022–2023 ம் ஆண்டிற்கு பயிற்சிக்கான தோராய செலவினம் ரூ. 50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 400/2016/சி1)**

11. பண்ணுருட்டி நகராட்சியில் இந்திய தாய்திருநாட்டின் **75-வது ஆண்டு சுதந்திர தினவிழா மற்றும் அமுதபெருவிழாவினை** 15.08.2022 ல் மிகவும் சிறப்பாக கொண்டாடும் பொருட்டு அழைப்பிதழ்கள் அச்சடிக்கவும், இனிப்பு மற்றும் கொடி தோரணங்கள் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,900/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.5162/2014/சி1)**

12. பண்ணுருட்டி நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-22-ம் ஆண்டு நிதியில் மேலப்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு டேபிள்கம் டெஸ்க் மற்றும் கம்ப்யூட்டர் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 30.04.2022-ந் தேதிய ந.க.எண்.27519-38/2021/P2 எண்ணிட்ட செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் திருமதி. M.மணிமாலா என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் டேபிள் கம் டெஸ்க் டான்சி நிறுவனத்திலும், கம்ப்யூட்டரை GEM டீலர் லைசன்ஸ் பெற்றவர் மூலம் பெற்று சப்ளை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட பணிக்கு வழங்கிய வேலை உத்திரவையும் மற்றும் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் அவர் செலுத்திய முன் வைப்புத் தொகையான ஒரு சதவீதத்தை ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1316/இ1/2022)**

13. இந்நகராட்சியில் தொழில்வரி இனத்தில் நீண்ட காலமாக நிலுவை உள்ளதால் அதனை வசூலிக்க இயலாததற்கான காரணம் குறித்து வருவாய் உதவியாளர்களிடம் குறிப்பு கோரப்பட்டதில் மேற்படி நிறுவனங்கள் மற்றும் கடைகள் காலி செய்யப்பட்டு விட்டதாகவும், அந்த நபர்கள் எங்கு சென்றார்கள் என்ற விபரம் அறியாத நிலை உள்ளதாகவும், அந்த தொகையை வசூலிக்க வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொழில் வரி வரிவிதிப்புகள் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

வருவாய் உதவியாளர்களின் குறிப்பின் மீது இவ்வலுவலக பணியாளர்களை கொண்டு 3 குழுக்கள் அமைத்து வார்டு வாரியாக ஆய்வு செய்து உரிய அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டதில் குழு உறுப்பினர்கள் குறிப்பில் வருவாய் உதவியாளர்கள் அளித்துள்ள பட்டியலில் கண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் கடைகள் உரிய முகவரியிலிருந்து காலி செய்யப்பட்டு விட்டது என தெரிய வருகிறது. அந்த தொழில்வரி தொகையை வசூலிக்க இயலாத நிலை உள்ளதால் அதனை மன்றத்திற்கு பொருள் வைத்து வஜா செய்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர்.

எனவே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 118-ன் கீழ் வசூலிக்கப்படாத காலம் கடந்த வரியினங்களை தள்ளுபடி செய்திட கீழ்காணும் விவரப்படி வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொழில் வரி இனங்களை தள்ளுபடி செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தொழில்வரி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 1 | 7305 |
| 2 | 2 | 894 |
| 3 | 3 | 109186 |
| 4 | 4 | 367517 |
| 5 | 5 | 724746 |
| 6 | 6 | 29978 |
| 7 | 7 | 206750 |
| 8 | 8 | 31118 |
| 9 | 11 | 87247 |
| 10 | 13 | 31492 |
| 11 | 15 | 49460 |
| 12 | 16 | 40318 |
| 13 | 17 | 55513 |
| 14 | 18 | 694943 |
| 15 | 19 | 24965 |
| 16 | 20 | 209231 |
| 17 | 21 | 599791 |
| 18 | 22 | 80783 |
| 19 | 23 | 1213352 |
| 20 | 24 | 13437 |
| 21 | 26 | 50433 |
| 22 | 27 | 178223 |
| 23 | 28 | 172275 |
| 24 | 29 | 46122 |
| 25 | 30 | 30625 |
| | **மொத்தம்** | **50,55,704** |

**அலுவலக குறிப்பு :**

வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொழில் வரி தொகை ரூ.50,55,704/- ஐ தள்ளுபடி செய்திட மன்றம் அனுமதிக்கலாம். மேலும் தொடர் கேட்பு எழுப்பப்படாமல் தள்ளுபடி செய்யப்படும் வரிவிதிப்புகளை நீக்கம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும், நீக்கப்பட்ட கடைகளில் தற்போது புதியதாக தொடங்கப்பட்டுள்ள கடைகள் (ம) தொழில் நிறுவனங்களுக்கு புதிய தொழில்வரி விதிக்கப்பட்டு வருகிறது.

**(கோப்பு எண். 1730/2022/அ1)**

14. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 1600 எண்ணிக்கையிலான 40W குழல் மின் விளக்கு, சோடியம் ஆவி விளக்கு 291 எண்ணிக்கையும் ஒளிர் உமிழ் விளக்குகள் 263 எண்ணிக்கை மற்றும் 8 எண்ணிக்கையில் உயர்மின் கோபுர விளக்குகளும் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மின் மாற்றுகளில் ஏற்படும் மின் அழுத்த வேறுபாட்டின் காரணமாக மின் விளக்குகள் சேதமடைகின்றன. மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிக்க போதுமான உதிரிபாகங்கள் இல்லாததால், பொதுமக்களிடமிருந்தும் நகர்மன்ற வார்டு உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. மேலும், நகரமன்ற தலைவர் அவர்கள் மேற்கண்ட புகார்களை உடனடியாக சரிசெய்ய கேட்டுக் கொண்டதன் பேரிலும், வரும்காலம் மழைகாலம் என்பதால் மின்கம்பிகள், புயல்காற்று ஒன்றுடன்

ஒன்று உராய்ந்து Flexuation ஏற்பட்டு தெருவிளக்கு உதிரிபாகங்கள் அதிகம் பழுது ஏற்பட வாய்ப்புள்ளது என்பதாலும், பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் உடனுக்குடன் புகார்களை சரிசெய்யும் விதமாகவும் மின் விளக்கு உதிரி பாகங்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண். 2329/இ2/2022)**

15. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 ஆம் ஆண்டு நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்தில் வார்டு எண் 12 மற்றும் வார்டு எண் 33 சந்திப்பு சாலை நடுவில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்/ பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் ந.க.எண்.அ3/5262/21 நாள்.04.07.2022 தேதிய கடிதத்தில் கீழ்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 | | |
| 1 | வார்டு எண் 12 மற்றும் வார்டு எண் 33 சந்திப்பு சாலை நடுவில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் (மொட்டலிங்கம் தெரு சந்திப்பு) | 4.50 |

<u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 2002/இ2/2022)

16. பண்ணுருட்டி நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-22-ம் ஆண்டு நிதியில் திருவதிகை டி.என்.பாவாடை பிள்ளை நகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு டேபிள்கம் டெஸ்க் மற்றும் கம்ப்யூட்டர் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 30.04.2022-ந் தேதிய ந.க.எண்.27519-38/2021/P2 எண்ணிட்ட செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் திருமதி. M. மணிமாலா என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் டேபிள் கம் டெஸ்க் டான்சி நிறுவனத்திலும், கம்ப்யூட்டரை GEM டீலர் லைசன்ஸ் பெற்றவர் மூலம் பெற்று சப்ளை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட பணிக்கு வழங்கிய வேலை உத்தரவையும் மற்றும் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் அவர் செலுத்திய முன் வைப்புத் தொகையான ஒரு சதவீதத்தை ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். **(கோப்பு எண். 1316/இ1/2022)**

17. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22 நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்தில் வார்டு எண் 26 தட்டாஞ்சாவடி பேருந்து நிறுத்தம் அருகில் டைவர்ஷன் ரோடு கொக்குபாளையம் இணைப்பு சாலையில் 9 மீட்டர் மினி உயர்மின் விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்/ பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் ந.க.எண்.அ3/5262/21 நாள்:29.07.2022 தேதிய கடிதத்தில் கீழ்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22 | | |
| 1 | வார்டு எண் 26 தட்டாஞ்சாவடி பேருந்து நிறுத்தம் அருகில் டைவர்ஷன் ரோடு கொக்குபாளையம் இணைப்பு சாலையில் 9 மீட்டர் மினி உயர்மின் விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல். | 4.50 |
| 2 | வார்டு எண் 13 திரௌபதி அம்மன் கோவில் திடலில் 9 மீ மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல். | 4.50 |

<u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம். **(கோப்பு எண். 1987/இ2/2022)**

18. பண்ணுருட்டி நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2016ல் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ள நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 15568/2016/K1 நாள். 29.06.2016 ன்படி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு. எஸ். சேகர் என்பவர் தான் பணிபுரிந்த காலத்தில் மிகையாக வழங்கிய ஊதியத்தினை தனக்கு வழங்க வேண்டிய ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு கணக்கிட்டு தொகை வழங்குவதில் பிடித்தம் செய்ய கூடாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.NO. 28029/2016–ல் வழக்கு தொடர்ந்து வழக்கின் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் 11.03.2022–ல் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதில் மேற்படியாருக்கு வழங்கிய தொகை ரூ. 2,02,866/–ஐ பிடித்தம் செய்யக்கூடாது என தீர்ப்பளிக்கப்பபட்டுள்ளது.

மேற்படி பணியாளர் பணி ஓய்வு பெற்றுள்ளதால் கூடுதலாக வழங்கிய தொகையினை பிடித்தம் செய்வதா அல்லது நீதிமன்ற உத்தரவில் தெரிவித்துள்ளவாறு மேற்படியாருக்கு தொகை வழங்குவதா என்பது குறித்து நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.பரணிசந்தர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற சிறப்பு கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் தெளிவுரை கோரப்பட்டு தெளிவுரையில் மேற்படியாருக்கு தொகை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக தொகை வழங்க கோரி 27.07.2022 மற்றும் 04.08.2022 ஆகிய தேதியில் இரண்டு கடிதங்கள் வரப்பெற்றுள்ளதால் மேற்படி வழக்கறிஞர் கட்டணமாக திரு.K.பரணிசந்தர், பண்ணுருட்டி அவர்களுக்கு தொகை ரூ. 4,000/– மற்றும் திரு. R. நீலகண்டன், சிறப்பு அரசு கூடுதல் வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு ரூ.25,000/– ஆக மொத்தம் ரூ.29,000/– ( ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண். 299 /2016/சி1)**

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.